**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.411/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வீரய்யா | த–பெ | அடைக்கண் |
| ஊர்: | : | சிறுகம்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 59/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் சிறுகம்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 மற்றும் அசா2 ஆகியவர்களை தெரியும். கடந்த 26.10.2015 அன்று காலை 5.30 மணிக்கு பனம்பட்டிக்கு டீ சாப்பிடுவதற்காக வந்தேன். அசா1 டீக்கடையில் செயினை நபர் ஒருவர் பறித்து சென்றார் என்று சத்தம் கேட்டது. நான் உடனே வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கு சென்றேன். அவரை விரட்டி பிடிப்பதற்குள் அவர் அந்த இடத்தில் இருந்து தப்பி சென்று விட்டார். மீண்டும் வந்து அசா1 இடம்கேட்டதற்கு அவரது கழுத்தில் அணிந்திருந்த பாதி செயினை பறித்து சென்றுவிட்டதாகவும் பாதி செயினை தனது வசம் வைத்திருப்பதாகவும் சொன்னார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.25 02:57:54 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.411/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆறுமுகம் | த–பெ | வெள்ளைச்சாமி |
| ஊர்: | : | பனம்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 70/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**<u>முதல் விசாரணை.</u>**

நான் தற்சமயம் பனம்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா1 மற்றும் அசா2 ஆகியவர்களை தெரியும். கடந்த 26.10.2015 அன்று காலை 5.30 மணிக்கு பனம்பட்டிக்கு டீ சாப்பிடுவதற்காக வந்தேன். அசா1 டீக்கடையில் செயினை நபர் ஒருவர் பறித்து சென்றார் என்று சத்தம் கேட்டது. நான் உடனே வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கு சென்றேன். அவரை விரட்டி பிடிப்பதற்குள் அவர் அந்த இடத்தில் இருந்து தப்பி சென்று விட்டார். மீண்டும் வந்து அசா1 இடம்கேட்டதற்கு அவரது கழுத்தில் அணிந்திருந்த பாதி செயினை பறித்து சென்றுவிட்டதாகவும் பாதி செயினை தனது வசம் வைத்திருப்பதாகவும் சொன்னார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.25 02:58:01 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.411/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த-பெ | வெள்ளைச்சாமி |
| ஊர்: | : | பனம்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 56/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | டீக்கடை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் பனம்பட்டியில் வசித்து டீக்கடை வேலை செய்து வருகிறேன். அசா1 எனது மனைவி. கடந்த 25.10.2015 அன்று பனம்பட்டியில் காலை 5.30 மணியளவில் எங்களது டீக்கடையில் அசா1 எனது மனைவி வேலை செய்து கொண்டிருந்தபோது நபர் ஒருவர் கடைக்கு வந்து சிகரெட் கேட்டார். அசா1 வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்து அவரது கழுத்தில் அணிந்திருந்த 41/2 பவுன் தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் அங்கு வந்து சற்று தூரம் அவரை துரத்தி கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றேன். ஆனால் அவர் தப்பி சென்று விட்டார். அன்றைய தினம் சாக்கோட்டை காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி எனது மனைவி புகார் அளித்தார் நான் உடன் இருந்தேன். ஒரு மாதம் கழித்து மேற்படி செயினை பறித்துசென்ற நபர் தேவக்கோட்டையை சார்ந்தவர் என்று போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. சத்தம் கேட்டு தான் அங்கு வந்தேன் என்றால் சரிதான். நான் துரத்தி செல்வதாக சொல்லும் வண்டியின் வகை பற்றிய விபரம் மற்றும் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் எனது மனைவி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.25 02:58:09 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.411/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | காளியம்மாள் | த-பெ | சரவணன் |
| ஊர்: | : | பனம்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 48/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | டீக்கடை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் பனம்பட்டியில் வசித்து டீக்கடை வேலை செய்து வருகிறேன். கடந்த 26.10.2015 அன்று பனம்பட்டியில் காலை 5.30 மணியளவில் எங்களது டீக்கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது நபர் ஒருவர் கடைக்கு வந்து சிகரெட் கேட்டார். நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் வந்து எனது கழுத்தில் அணிந்திருந்த 41/2 பவுன் தங்க செயினை அறுக்க முயற்சித்த போது நான் அந்த செயினின் ஒரு பகுதியை பிடித்துக்கொண்டேன். அப்போது வீட்டில் இருந்த எனது கணவர் வந்தபோது அவர் மேற்படி செயினை பறித்து கொண்டு அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் சாக்கோட்டை வழியாக தப்பி சென்று விட்டார். பின்னர் இது தொடர்பாக சாக்கோட்டை காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். புகார் அசாஆ 1. போலீசார் விசாரணை செய்தார்கள். பின்னர் 1 மாதம் கழித்து போலீசார் விசாரணைக்காக காவல் நிலையம் வர சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். 2015 ம் வருடம் நடந்ததால் எனக்கு தற்சமயம் எதிரியை நியாபகம் இல்லை. பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து நிபந்தனையுடன் எனக்கு சொந்தமான தங்க செயினை நான் பெற்றுக்கொண்டேன். புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நகை எனக்கு சொந்தமானது. அது சா.பொ1. போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

தங்க செயினை இரண்டு பகுதியாக அறுத்துவிட்டதாக சொல்வதில் என் கையில் இருந்த நகையின் மதிப்பு எவ்வளவு என்றால் 1 பவுன். போலீசார் என்னிடம் தங்க கட்டியாக கொடுத்து அதை செயினாக செய்து வரச்சொன்னார்கள், அவர்கள் கூறியதன் படி பாதி செயினை மட்டும் செய்து போலீசாரிடம்கொடுத்தேன். நான் செய்து கொடுத்த செயினை தான் நீதிமன்றத்தில் மனுசெய்து பெற்றுச்சென்றேன் என்றால் சரிதான். புகாரில் எதிரியின் வயது அங்க அடையாளங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வந்த இருசக்கர வாகனத்தின் வகை என்ன என்ற விபரம் தெரியுமா என்றால் நான் இருசக்கர வாகனத்தை பார்க்கவில்லை.

எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.25 02:58:17 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி